# கழக இளைஞரணி மாநில மாநாடு (23)

# பாதை மாறுவதுமில்லை; பயணம் நிற்பதுமில்லை!

## கலைஞர் கடிதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி



வெளிவருவதற்கென்று, “ஒரு கண்ணில் சுண்ணாம்பு” என்னும் தலையங்கத்தையும், “நீட்டோலை” என்னும் அரசியல் மடல் ஒன்றையும் நான் தீட்டியிருந்தேன். அவற்றின் “புரூப்”களைத் தந்திட வேண்டுமென்று அவர் வற்புறுத்தினார். எழுத்து வடிவில் கேட்டாலன்றி அவற்றை அளித்திட இயலாது என்று நான் மறுத்துவிட்டேன். உடனே தம்மோடு வரவேண்டும் என்றார்.

“பெட்டி, படுக்கைகளுடனேயே நான் புறப்படலாமா?”

என்று வினவினேன் சிரித்துக் கொண்டே.

அவரும் அதற்குச் சரி என்று தலையசைத்தார் முறுவலுடன்! பின்னர் வீட்டினுள் சென்று பெட்டி, படுக்கைகளை எடுத்துக்கொண்டு வெளியே வந்தேன்.

“போகலாமா?” என்றேன், காவல் துறை அதிகாரிகளை நோக்கி.

“போகலாம்” - என்றனர்.

அழுகை வெள்ளத்துக்கு அணைபோட்டு நின்றிருந்த குடும்பத்தாரிடம், விடை பெற்றுக் கொண்டு, போலீஸ் வண்டியிலே ஏறிக் கொண்டேன்.

எழும்பூரில் உள்ள காவல் துறை கமிஷனர் அலுவலகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டேன். அப்பொழுது இரவு மணி பன்னிரண்டு.

அங்கும் அந்த உயர் அதிகாரி - “முரசொலி” ஏட்டிலே நான் தீட்டிய தலையங்கங்கள் பற்றியும், வெளியிட்ட செய்திகள், கட்டுரைகள் பற்றியும் விடாமல் வினா அம்புகளைத் தொடுத்தார். இரவு மணி 1-30 வரை விசாரணை நீடித்தது. பிறகே உறங்குவதற்கு இடம் கொடுத்தனர்.

16.2.1965 அன்று இரவே, நான் கைது செய்யப்பட்டுவிட்ட தகவலை அப்போது காஞ்சியிலிருந்த அண்ணா அவர்களுக்குத் தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டது.

மூன்று மணி நேரங்கூடச் சரியாகத் தூங்கிடவில்லை. மீண்டும் எழுப்பி போலீஸ் லாரியிலே என்னை ஏற்றினர்.

அப்போது விடியற்காலை 4-30 மணிகூட ஆகியிராது.

என்னைச் சுமந்து கொண்ட வாகனம், சென்னையைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு எங்கோ பறந்தது வேகமாக.

பனி கொட்டியது.

குளிர் நடுங்க வைத்தது.

தெற்குத் திக்கினை நோக்கியே லாரி ஓடிக் கொண்டிருந்தது. எந்தச் சிறையிலே தள்ளப் போகிறார்கள் என்றே எனக்குத் தெரியவில்லை. தெரிவிக்கவும் இல்லை காவல் துறையினர்.

17.2.65 காலை 8.30 மணி அளவில் திண்டிவனம் தென்பட்டது. உளுந்தூர்பேட்டையும் தாண்டியாயிற்று.

“ஒருவேளை திருச்சி சிறைக்குத்தான் கொண்டு செல்வார்களோ?”

பழைய நினைவுகள் - நிகழ்ச்சிகள் படமாய் விரிந்தன மனத்திரையில். இதற்கு முன்னர் பெரும்பாலும் நெடுநாட்கள் சிறைப்பறவையாய் நான் அடைபட்டுக் கிடந்ததும் திருச்சியிலேதான்.

மும்முனைப் போராட்டம் -

கல்லக்குடி -

தண்டவாளத்திலே தலை -

அதற்காக ஆறு மாதச் சிறை -

இப்படிப் பொங்கிப் புரண்டன நெஞ்சின் அலைகள்.

இதற்கு இருபது நாட்களுக்கு முன்னர், குடியரசு நாளைத் துக்க நாளாகக் கொண்டாடக் கழகம் எடுத்திட்ட முடிவினையொட்டிக் கைதானபோது கூடத் திருச்சிக்குத்தான் கொண்டு வந்து சப்-ஜெயிலிலே என்னைத் தள்ளினார்கள்.

“இப்போதும் அப்படித்தான் இருக்கலாமோ?” - என்றுதான் எண்ணிடத் தோன்றியது எனக்கு. ஆனால், நான் நினைத்தவாறு திருச்சி சிறை எனக்குக் கிட்டவில்லை இந்த முறை.

நடுப்பகல் 12 மணி அளவில், திருச்சியில் நுழைந்திட்ட போலீஸ் லாரி, நேரே ஆயுதப் படைப் போலீஸ் முகாமிற்குச் சென்றது. அங்கே எனக்கு மதிய உணவு வழங்கினார்கள். பின்னர் தொடங்கிற்றுப் பயணம்.

நேரம் செல்லச் செல்ல எனக்கு, நெஞ்சிலே வலி கண்டு தாங்கொணாத அளவுக்கு அதிகரித்துக் கொண்டே போயிற்று. அதற்கு லாரிப் பயணமும் ஒரு காரணம்! முந்திய இரவில் உறக்கமும் சரியானபடி இல்லையல்லவா?

ஒருவர், நீண்ட நெடுந்தொலைவு பேருந்துப் பயணம் புரிந்தாலே உடல் அலுக்கை வாட்டி வதைத்திடும். குலுங்கக் குலுங்க உடம்பைத் தூக்கிப் போடும் லாரிப் பயணம் என்றாலே கேட்க வேண்டுமா அவதிக்கு?

எனக்கு நெஞ்சு வலி கண்டதற்குக் கிஞ்சிற்றும் இரக்கமற்ற முறையிலே குதித்துக் குதித்து ஓடிக் கொண்டிருந்த லாரியையே நான் குறை கூறிட வேண்டும்.

இதைப் பற்றி நண்பர் ப.உ. சண்முகம் பின்னர் சட்ட மன்றத்திலே இப்படிக் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

“........இங்கே (சென்னையில்) கைது செய்யப்பட்ட கலைஞர் கருணாநிதி, நெஞ்சு வலியுடன் போலீஸ் லாரியில் அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார். நான் கேட்கிறேன்! அவரை அழைத்துச் செல்லப் போலீஸ் லாரிதான் உங்களுக்குக் கிடைத்ததா? அவர் தி.மு. கழகத்தைச் சேர்ந்தவர் என்பதற்காக நான் கேட்கவில்லை! எங்கள் கட்சியிலே அவர், ஒரு முக்கியமான தலைவர் என்பதற்காகக்கூடக் கேட்கவில்லை! சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் என்ற முறைக்காவது, அவரை ஒரு காரிலே அழைத்துச் செல்லக் கூடாதா? நானூறு மைல்களுக்கு அப்பால் உள்ள ஒரு சிறைச்சாலைக்கு நெஞ்சு வலியோடு போலீஸ் லாரியிலே அழைத்துச் செல்வது, எந்த வகையிலே நியாயம்?”

என்னைப் பொறுத்தவரை, சிறைக்குள்ளே தங்குகின்ற வகையிலாவது இத்துணைக் கொடுமையான வலி ஏற்படாத வகையிலே கொண்டு போகக் கூடாதா என்றுதான் நான் எண்ணினேன். எம்பி எம்பிக் குதிக்காதபடி லாரியை மெதுவாகவேனும் ஓட்டியிருக்கலாம்.

மற்றபடி, துன்பத்தைக் கூட்டிச் சுமக்கத் துணிந்திட்ட ஒரு தொண்டனுக்குத் தான் ஏறிச் சென்றிடும் வாகனம் காராய் இருந்தால் என்ன? லாரியாய் இருந்தால் என்ன? கட்டை வண்டியாய் இருந்தால் என்ன? “ஜட்கா” வண்டியாய் இருந்தால் என்ன? எல்லாம் ஒன்றுதான். வாகனம் எதுவாக அமைந்த போதிலும், அவனுடைய பாதை மாறிடப் போவதில்லை; பயணமும் நின்றிடப் போவதில்லை.

என்னை ஏற்றிச் சென்றிட்ட லாரி, மதுரையை அடைந்த பொழுது மாலை 4.30 மணி இருக்கலாம். ஆயுதப் படைப் போலீஸ் முகாமுக்கே என்னை முதலில் கொண்டு சென்றார்கள். நூற்றுக் கணக்கான போலீஸ்காரர்களுக்கு மத்தியிலே நான் காவலில் வைக்கப்பட்டேன்.



நெஞ்சு வலியோ நிமிடத்திற்கு நிமிடம் என்னை, துடியாய்த் துடிக்கச் செய்தது. எனவே, எனக்கு சிகிச்சை அளிக்கும் பொருட்டு, அரசாங்க மருத்துவமனையிலிருந்து டாக்டர் ஒருவர் வரவழைக்கப்பட்டார்.

அவரோ, என் நிலைமையைப் பார்த்துவிட்டு மேற்கொண்டு என்னைப் பயணத்தில் ஈடுபடுத்துவது, என் உடல் நலனுக்கு உகந்தது அல்லவென்று உறுதியாகக் கூறிவிட்டார். அவருடைய அறிவுரையைப் புறக்கணிக்க முடியாத நிலையில் என்னை மதுரை மத்தியச் சிறைச்சாலைக்கு இட்டுச் சென்றனர். மதுரை சிறையில் பயங்கர கொசுக்களின் படையெடுப்பு - கொட்டடிக்குள் அங்குமிங்கும் ஓடி, கொசுக்கடி தாங்காமல் அலறியே விட்டேன்.

இரவிலோ மேலும் கடுமையாயிற்று நெஞ்சு வலி. மார்பை இறுக்கிப் பற்றிக்கொண்டு நான் தவித்த தவிப்பு - துடித்த துடிப்பு - கொஞ்சம் நஞ்சமல்ல. வேதனையின் விளிம்பிற்கே நான் விரைந்த வண்ணம் இருந்தேன்.

மறுபடியும், அரசாங்க மருத்துவமனையிலிருந்து இரண்டு டாக்டர்கள் அழைத்து வரப்பட்டார்கள். எனக்குச் சிகிச்சை அளித்திட! உறக்கம் வருவதற்கென்றே ஊசியும் போடப்பட்டது.

நான் இப்படி நெஞ்சு வலியோடு போராடுவதை நேரிலே கண்டும்கூட, என்னை, மதுரைச் சிறையிலேயே வைத்திட மனம் வரவில்லை காவல் துறையினருக்கு.

18.2.1965 விடியற்காலை மறுபடியும் என்னை லாரியிலே ஏற்றினர். மதுரையை விட்ட பிறகும் தென் திசையை நோக்கியே தீராத பயணம்.

ஆனால் இப்போது புதிய தகுதிகள் சில என் பயணத்திற்குப் பொலிவேற்றின. என்னுடைய லாரிக்கு முன்னே ரிசர்வ் போலீஸ் லாரியும், பின்னே ஒரு ரிசர்வ் போலீஸ் லாரியும் அணி வகுத்து வந்தன.

அண்ணாவின் மூன்று தாரக மந்திரங்களில் ஒன்றான கட்டுப்பாட்டினைக் கண்ணே போல் கருதக்கூடியவன் - அதனைக் கடுகளவு கூட மீறத் துணிவில்லாதவன் - என்கிற உண்மை காவல் துறையினருக்குப் புரிந்திடவில்லையோ என்னவோ? எனக்குரிய கட்டுக் காவலை மிகுதிப் படுத்தியிருந்தனர், தங்களுடைய கடமை உணர்வின் காரணமாக.

வழியிலே கயத்தாறு! கட்டபொம்மனின் காலடிச் சுவடு பதிந்திட்ட வீரஞ்செறிந்த மண்.

நெல்லை நகரின் எல்லையை அடைந்திட்ட பொழுது இன்னொரு ஏற்பாடும் என்னை வியப்புக் கடலிலே வீழ்த்தியது. அங்கிருந்து நகர் நெடு கிலும், பாளையங்கோட்டைச் சிறை வரையிலும் இரும்புத் தொப்பி அணிந்த போலீசார் இரு மருங்கிலும் சுவர் எழுப்பியதுபோல் வரிசையாக நின்றனர்.

“ஓர் எதிர்க்கட்சித் தொண்டனுக்குக் கூட இவ்வளவு கோலாகல வரவேற்பா? அரசாங்க அணிவகுப்பு மரியாதையா?” என்று உள்ளூற எண்ணிச் சிரித்துக் கொண்டேன் நான்.

வேளா வேளைக்கு உணவு அருந்தாமல்கூட என்னால் வெறும் வயிற்றோடு இருந்திட முடியும்; ஆனால் நாளைக் கடத்திடவே முடியாமல் தவியாய்த் தவிப்பேன், நண்பர்கள் முகங்காண முடியா விட்டால்.

அதனால்தான் பாளையங்கோட்டை தனிமைச் சிறை படுமோசமான மனத் துயரத்தையே விருந்தாகப் படைத்தது எனக்கு!

என்றாலும், அந்தக் “கூண்டுக்கிளி” வாழ்க்கையும் பெருமிதத்தையே கொடுத்தது ஒரு விதத்தில்.

காரணம்; நான் அடைக்கப்பட்டிருந்த சிறைச் சாலைக்கு வரலாற்றுப் பெருமை நிரம்ப உண்டு அல்லவா?

“இமயம் நிகர்த்த பெருமனிதர்கள் - ஏகாதிபத்தியக் காரிருளை விரட்டிய எழு ஞாயிறுகள் - குகைப் புலிகளாக உலவிய கொட்டடிப் பகுதிக்குத்தான் நாமும் கொண்டு வந்து சேர்க்கப்பட்டிருக்கிறோம்” என்று எண்ணிய மாத்திரத்தில் என் உள்ளம் பூரித்தது, உடல் புல்லரித்தது.

முன்பொரு சமயம் வெள்ளையர் ஆண்டிட்ட காலத்தில் பெரிய மனிதர்களுக்குரிய மத்தியச் சிறையாக விளங்கிய அந்த பகுதி பின்னர், பதினெட்டு வயதுக்குக் குறைந்த இளங் குற்றவாளிகளின் சீர்திருத்தப் பள்ளியாக மாற்றப்பட்டு விட்டது.

சிறுவர்களுக்கான சிறைச்சாலை என்பதால், அங்கே விளையாட்டு அரங்கங்களும் உண்டு; கொட்டடிக் கதவுகளும் திறந்தே இருக்கும்.

ஆனால், என்னைக் கைதியாக அடைத்துவிட்ட பின்னரோ, அந்தச் சிறுவர் சிறைச் சாலையின் திறந்திருந்த கதவுகளும் கூட, மமதையாளர்களின் உதடுகளைப் போல இறுக்கி மூடிக்கொண்டு விட்டன கடுமையான காவலுடன்.

நெல்லை - நாகர்கோவில் நெடுஞ்சாலையில் அமைந்திருந்த அந்தச் சிறைச்சாலையிலே, தனிமைத் தணலிலே தள்ளப்பட்ட எனக்கு, உடல் நலமும் உருக்குலைந்த வண்ணமே இருந்தது. நாள்தோறும் மருத்துவர்கள் வந்து சிகிச்சை அளித்தனர். உடல் நோயைவிட நமக்குத் தெரிந்த முகங்களையே காணமுடியவில்லையே என்கிற உள்ள நோய்தான் தொல்லைப் படுத்தியது மிகுதியாக.

ஐந்தாவது நாள், வழக்கறிஞர் திரு. நாராயணசாமி முதலியார் (ஓய்வு பெற்ற உயர்நீதி மன்ற நீதிபதி), திரு. இரத்தினவேல் பாண்டியன் (ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி) ஆகியோர் என்னைச் சந்திக்க வந்தனர்.

பாளைச் சிரிப்பு -

பார்ப்பதற்கு அழகானது!

பளபளப்பாய் - பல அடுக்கு

மணிச் சரமாய் - ஒளி வீசுவது!

நான் இருந்த -

பாளைச் சிறை -

தென் பாண்டிப் பாளைச் சிறை -

பார்ப்பதற்கு அழகானதல்ல!

பார்வைக்கும் வேலை தருவதல்ல -

வார்டர் ஒருவரைத் தவிர, வேறு மனித முகங்களையே பல நாட்களுக்குக் காட்டாததால்!

பாளையங்கோட்டையில் நான் அடைபட்டுக் கிடந்த சிறைப் பகுதி “குவாரன்டைன்” என்று அழைக்கப்படுவதாகும். இளங் குற்றவாளிகள் பள்ளிக்கு வெளியேதான் அது அமைந்துள்ளது. அங்கே நாற்பது அறைகள் உள்ளன; அவற்றில் ஒன்று மட்டுமே எனக்காக ஒதுக்கப்பட்டது. மற்ற முப்பத்தொன்பதிலும் முழுமையாக நிரம்பி வழிந்தது தனிமை - வெறுமை! மனிதர்கள் அல்லர்!

காலையில் விழித்ததும் கண்ணிலே படுவது புளிய மரம் - களை இழந்த இலையுதிர்ந்த புளிய மரம்!

உடனே, கயத்தாற்றில் கட்டபொம்மன் தொங்க விடப்பட்ட அந்தப் புளிய மரமும் என் கண்ணுக்குப் படும்; புறக்கண்ணுக்கு அல்ல - அகக் கண்ணுக்கு!

செங்கதிரோனின் தங்கக் கதிர்கள் - கரங்கள் - தழுவி எடுக்கும் பூமிக் குழந்தையை. அந்த வெளிச்சத்தின் சாயல் மெல்லப் படர்ந்து வரும், நான் இருக்கும் வெறிச்சோடிய பகுதியிலும்.

பின்னரே நான் வெளியே வரும் பொருட்டுக் கதவைத் திறந்து விடுவார்கள். சிறைக் கதவை அல்ல - அறைக் கதவை!

சின்னஞ்சிறு கூட்டிலிருந்து சற்றுப் பெரிய கூண்டுக்கு வந்துவிட்ட உணர்வே மேலோங்கி நிற்கும்.

பகலிலோ வேக வைக்கும் “வெயில்”! வேகமாகப் போக மறுக்கும் “பொழுது”.

அதனால் உடல் புழுங்கும்; உள்ளமும் புழுங்கும்.

இரவு ஒன்பது மணிக்கு மறுபடியும் அறைக் கதவைப் பூட்டி விடுவார்கள், என்னை உள்ளே வைத்துத்தான்!

பசுந்தளிர்ப் பருவத்தில் எத்தனையோ வேடிக்கையான விடுகதைகள் போட்டு மகிழ்வது எனக்கு வாடிக்கை.

“அந்தரான காட்டில் சொக்கன் பந்தடிக்கிறான்” - என்பதும் அவற்றிலே ஒன்று. ஒரு நாள் அந்தச் “சொக்கன்” என் பக்கமும் பந்தடிக்க வந்து விட்டான்! ஆம் அணில் ஒன்று நான் இருந்த சிறைக் கோட்டம் வந்து சேர்ந்தது! மனித முகம் காணாமல் மனந் தவித்துப் புழுங்கிய நான், அணில் முகத்தைக் கண்டதுமே அகங் குளிர்ந்தேன்; முகம் மலர்ந்தேன்; ஆறுதலும் மிக அடைந்தேன். அதனைக் கனிவோடு கையில் எடுத்து அறையிலே உள்ள “கப்போர்டில்” படுக்க வைத்தேன்.

ஆனால் பாவம், அதுவும் என்னைப் போல் ஒரு நோயாளி! காக்கையோ, குருவியோ கொத்தியதால் அதன் உடலில் காயம்; என்னைப் போல் உள்ளத்தில் அல்ல! காரணம் அதற்கு அரசியல் தெரியாதே!

இந்தியப் பாதுகாப்புச் சட்டம் 30 (1) பிரி வின்படிதான் நான் கைது செய்யப்பட்டு பாளையங்கோட்டைச் சிறையிலே முடக்கப் பட்டேன். அந்தச் சட்டப்படி - அந்தப் பிரிவின்படி - முதன் முதல் கைது செய்யப்படும் பேறு பெற்றிட்ட கழகத் தொண்டன் நான்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

அந்தத் தியாகத்தை நான் வீரப் பதக்கமாகவே கருதினேன். அப்படியே கருதுகிற காளைகளாம் இளைஞர்கள்தான் இப்போதும் கழகத்தின் இளைஞர் அணியிலே இருக்கிறீர்கள்! உங்கள் அனைவரையும் உளமார வரவேற்கிறேன் நெல்லை மாநாட்டுக்கு!

**அன்புள்ள,**

**மு.க.**

(முரசொலி 30.11.2007)